தமிழ்நாடு அரசு
நீர்வளத்துறை

கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநர், நீவது., நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம், பூண்டி அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : பொறி.ஆ.ஜெயசண்முகம், எம்,இ., எம்.சி.ஏ.,
கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநர், நீவது.,

செயல்முறை ஆணை எண்.இ1/1315/2022, நாள்.02.08.2024.

பொருள்:- பணியமைப்பு - நீவது., - த.நா.அ.ப.தொகுதி - திரு.ரா.பிரீத்குமார், த/பெ. காலஞ்சென்ற திரு.பா.ராஜ்குமார், பாசன உதவியாளர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டவர் - பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:-
1) முதன்மை தலைமைப் பொறியாளர், நீவது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீவது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செ.மு.ஆ.எண்.எஸ்.3(2)/43141/2022,நாள் 17.10.2022.
2) தலைமைப் பொறியாளர், நீவது., வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செ.மு.எண்.இ1(1)/4643/2022, நாள்.20.10.2022.
3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். இ1/ 1315 /2022/ நாள் 31.10.2022.
4) இவ்வலுவலக கடித எண்.இ1/1315/2022, நாள்.19.01.2024.
5) தலைமைப் பொறியாளர், நீவது., வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடித எண்.பிஇ2/0323/2024, நாள்.13.02.2024.
6) அரசாணை (நிலை) எண்,33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள்.08.03.2023.
7) அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீவது., தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடித எண்.1321/பி1/2024-1, நாள்.02.04.2024.
8) முதன்மை தலைமைப் பொறியாளர், நீவது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீவது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடித எண்.எஸ்.3(2)/21951/2024, நாள் 29.04.2024.
9) தலைமைப் பொறியாளர், நீவது., வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடித எண்.பிஇ2/0323/2024, நாள்.13.06.2024.

""

உதவி செயற்பொறியாளர், நீவது., கிருஷ்ணா குடிநீர் திட்ட உபகோட்டம், புதுச்சத்திரம் அலுவலகத்தில் பாசன உதவியாளராக பணிபுரிந்த திரு.பா.ராஜ்குமார், அவர்கள் 07.06.2018 அன்று காலமானார். காலஞ்சென்ற அரசு ஊழியர்

திரு.பா.ராஜ்குமார், பாசன உதவியாளரின் மகன் திரு.ரா. பிரீத்குமார் அவர்களுக்கு பார்வை 1 முதல் 3 வரை உள்ள செயல்முறை ஆணைகளின்படி இவ்வட்ட அலுவலகத்தில் காலியாக இருந்த இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வட்ட அலுவலகத்தில் 04.11.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் திரு.ரா. பிரீத்குமார் இளநிலை உதவியாளர் அவர்களுக்கு பணிவரன்முறை செய்ய கருத்துரு தலைமைப் பொறியாளர், நீவது., வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. பார்வை 5-ல் காணும் தலைமைப் பொறியாளர், நீவது.,. வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடிதம் மூலம் பணிவரன்முறை ஆணை பெறும் பொருட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. பார்வை 7-ல் காணும் அரசு கடிதம் மூலம் கூடுதல் விவரங்கள் கோரப்பட்டிருந்த நிலையில் பார்வை 6-ல் காணும் அரசாணையில் (Tamil Nadu Civil Serives (Appointment on Compassionate Grounds) Rules, 2023) வெளியிடப்பட்டுள்ள கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணிவரன்முறை குறித்த கருத்துருவில் விதித்தளர்வு தேவைப்படாத இனங்களில் பணிநியமன அலுவலர் நிலையில், பணியாளர்களின் பணியினை விதி 16-ன்படி வரையரைக்குட்பட்டு நியமன அலுவலரே வரன்முறை செய்து கொள்ளுமாறும், விதி 17-ன்படி கல்வித் தகுதி தவிர, இதர விதித்தளர்வு தேவைப்படும் பணியாளர்களின் பணிவரன்முறை தொடர்பான கருத்துருக்களை மட்டுமே அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை 7,8 மற்றும் 9-ல் காணும் அரசுக் கடிதம், முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீவது., சென்னை மற்றும் தலைமைப் பொறியாளர், நீவது., வடிவமைப்பு ஆராய்ச்சி (ம) கட்டுமான ஆதாரம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி திரு.ரா. பிரீத்குமார், இளநிலை உதவியாளர் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 04.11.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்படும் திரு.ரா. பிரீத்குமார், இளநிலை உதவியாளர் அவர்கள் அப்பதவியில் தொடர்ந்து மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகளில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

மேலும் தனியர் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

ஒப்பம்/- பொறி.ஆ.ஜெயசண்முகம், நாள்.02.08.2024,
கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநர்,நீவது,
நீ.நீ.ஆ.க., பூண்டி.

பெறுநர்

திரு.ரா.பிரீத்குமார், இளநிலை உதவியாளர்,
(வழி)கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநர் அலுவலகம்,
நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக்கழகம்,
பூண்டி - 602 023.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்புப் பொறியாளர்/இயக்குநர்,நீவது, சார்பில்,
நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம்,
பூண்டி - 602 023.